# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் சாலை சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–*2435 7590.*

**ஆணை நாள் – 17.02.2015**

**முன்னிலை**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**<u>வழக்கு எண்.4709/F/2014</u>**

திரு. M. நல்லசாமி,
தாராபுரம் ரோடு,
ஊஞ்சவேலாம்பட்டி (அஞ்சல்),
பொள்ளாச்சி (தாலுக்கா),
கோயம்புத்தூர் மாவட்டம். .. மேல்முறையீட்டாளர்

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
காங்கயம் மின் பகிர்மான வட்டம், காங்கயம்,
திருப்பூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

*********

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (17.02.2015) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.M.நல்லசாமி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.K.தண்டபானி, பொது தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், காங்கயம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் படியான தனது 21.08.2013 தேதியிட்ட மனுவில், தாராபுரம் தாலுகா, முளையாம்பூண்டி கிராமம், சரவணகவுண்டன் வலசில் க.ச.எண். 237–ல் உள்ள பொது கிணற்றுக்கு (லேட்) பழனிச்சாமி கவுண்டர் பெயரில் மின்சார வாரியத்தால் வழங்கப்பட்ட பொது மின் இணைப்பு எண்.SC 36க்கு பயனாளியிடம் இருந்து பெறப்பட்ட அனைத்து ஆவண நகல் மற்றும் மின்வாரியத்தின் விதிமுறைகள் அடங்கிய ஆவண நகலின் ஒளிவடிப்பு நகல், மின்சார வாரியத்திலிருந்து SC

36க்கு உள்ள டேஸ் போர்டு ஆவணத்தின் உண்மை ஆவண ஒளிவடிப்பு நகல், SC 36 இணைப்பு சுயநிதியில் வழங்கப்பட்டதா அல்லது இலவசமாக இணைப்பு வழங்கப்பட்டதா என்பதன் நம்பக தன்மையை அறிய அதன் படிவ நகல் மற்றும் SC 36க்கு எவ்வளவு குதிரைத்திறன் மின்சாரம் வழங்கப்பட்டது என்பதன் நம்பகத்தன்மையை அறிய குதிரைத்திறன் பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட உண்மை சான்றாவண நகல் ஆகியவற்றைக் கோரி 4 இனங்களில் தகவல்கள் கேட்டிருக்கிறார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் 03.09.2013 நாளிட்ட கடிதம் வாயிலாக, அலுவலக இடமாற்றத்தின் காரணமாக கோப்புகள் இடம் மாறி வேறு வேறு இடங்களில் கலந்து இருப்பதால் தேடப்பட்டு வருகிறது என்ற தகவலை மனுதாரருக்கு அனுப்பியிருக்கிறார். அதில் திருப்தியடையாத மனுதாரர் தனது 16.12.2014 தேதிய சட்டப் பிரிவு 19(1)ன்படியான முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டிற்கு 04.01.2014 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலர், 30 நாட்கள் காலக்கெடுவுக்குள் மேல்முறையீடு செய்யாததால் மனுவை பரிசீலனை செய்ய இயலாது என கூறியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து, தனது 30.01.2014 தேதிய இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரர் அனுப்பிய இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்றைய (17.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுத் தகவல் அலுவலர் சட்டம் விதித்திருக்கின்ற கால கெடுவுக்குள் பதில் தராமல் காலம் தாழ்த்தி பதில் தந்ததாலும், அந்த ஆவணம் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருக்கிறார். இது ஏற்கத்தக்க ஒரு பதிலாக அமையாது என இவ்வாணையம் கருதுகிறது. மனுதாரர் சம்பந்தப்பட்ட மின் இணைப்பில் கூட்டுப் பாத்தியதாரர் என்று கூறும் நிலையில் அவரை ஒரு மூன்றாம் நபர் என்று கருதுவதற்கு இல்லை. அவர் கேட்கின்ற தகவல்களை வழங்குவது பொதுத் தகவல் அலுவலரின் கடமையாகும். இதுநாள் வரை ஆவணங்கள் தேடப்பட்டு வருகிறது என்று எடுத்த எடுப்பிலேயே நிராகரித்திருப்பது கண்டனத்திற்குரியது என்று இவ்வாணையம் கருதுகிறது. இதுகாறும் எந்த தகவலும் வழங்காத நிலையிலும், ஆவணங்கள் தேடப்பட்டு வருவதாகவும் தொடர்ந்து சொல்கின்ற நிலையில், பொது அதிகார அமைப்பு RTI சட்ட வகைமுறைகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிற நிலையைத்தான் காணமுடிகிறது. பொதுத் தகவல் அலுவலர் உரிய சிரத்தையுடன் ஆவணங்களைத் தேடி கண்டுபிடித்து மனுதாரர் கேட்டிருக்கின்ற தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் வழங்கவேண்டும் என்று இவ்வாணையம் ஆணையிடுகிறது.

மனுதாரருக்கு அவர் கோரிய தகவல்களை உரிய காலக்கெடுவுக்குள் முழுமையான தகவல் வழங்காததற்காக சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)—ன் கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/— ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கான எழுத்துமூலமான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)—ன் கீழ் ஏன் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துமூலமான விளக்கத்தையும் இவ்வாணைக் கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் அனுப்பி வைக்க பொது தகவல் அலுவலருக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டு இவ்வழக்கு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/— (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.4709/F/2014</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
காங்கயம் மின் பகிர்மான வட்டம், காங்கயம்,
திருப்பூர் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. M. நல்லசாமி,
தாராபுரம் ரோடு,
ஊஞ்சவேலாம்பட்டி (அஞ்சல்),
பொள்ளாச்சி (தாலுக்கா),
கோயம்புத்தூர் மாவட்டம்.

**sg/pa**